6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளங்கலை படிப்புகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையிலான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளங்கலை படிப்புகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையிலான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளாக நீட் தேர்வினால் தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழை, எளிய மாணவர்கள், மருத்துவப் படிப்புகளில் சேர்வது குறைந்துவிட்டது. இதனைத் தெளிவாக ஆராய்ந்து, அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மாணவர்களுக்கும் சம வாய்ப்பளித்து, அவர்களுடைய மருத்துவராகும் இலட்சியத்தை நிறைவேற்றிட மாநகராட்சிப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், வனத் துறைப் பள்ளிகள் உள்ளிட்ட அரசுப் பள்ளிகளில் பயின்று, “நீட்” தேர்வில் அடிப்படை தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு பிரத்யேகமாக ஓர் உள் ஒதுக்கீடு செய்து கொடுக்கும் வகையில், சிறப்புச் சட்டம் ஒன்று இயற்றப்படும் என 21–3–2020 அன்று நான் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தேன். அதற்கேற்ப தற்பொழுது இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளங்கலை படிப்புகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையிலான சேர்க்கைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

2020 செப்டம்பர் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு பொது சுகாதார (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.